# தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் சென்னை-6

ந.க.எண். 45428 /எம்/இ2/2023 நாள்:31.01.2024

பொருள்: பள்ளிக் கல்வி - மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - அரசுப் பள்ளிகளில் ஆண்டு விழா நடத்துதல் -மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குதல் - சார்பு.

பார்வை:
1. மாண்புமிகு தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கை அறிவிப்புகள் - 2023 - 2024 அறிவிப்பு எண்.7
2. அரசாணை (நிலை)எண்.241 பள்ளிக்கல்வி (ப.க.5(1) துறை நாள் 15.12.2023.

------

ஒரு மாணவனின் ஒட்டுமொத்த ஆளுமை வளர்ச்சிக்கு, அம்மாணவனின் வகுப்பறை கற்றல் அனுபவங்களும், கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் புற கல்விச் செயல்பாடுகளில் அம்மாணவர்கள் சிறப்பான பங்களிப்பும் காரணமாக அமைகின்றன. கல்வியாண்டு முழுவதும் பள்ளியில் நிகழும் தொடர்ச்சியான கல்வி மற்றும் கல்விசார் செயல்பாடுகளில் மாணவர்களின் பங்கேற்பினை, ஆண்டு இறுதியில் மாணவர்கள் அவர்கள் தம் பெற்றோர்கள் முன்னிலையில் வெளிப்படுத்த நல்வாய்ப்பாக அமைவது பள்ளி ஆண்டு விழாவாகும். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 2023-2024 ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது அரசுப் பள்ளிகளில் ஆண்டு விழா நடத்துதல் குறித்து தமிழ்நாடு சட்டப் பேரவையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

"அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆண்டு விழா சிறப்பான முறையில் நடத்தப்படும். இதில் மாணவர்களின் கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற பல்வேறு திறன்களை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்னிலையில் வெளிக்காட்ட வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். இதற்கென சுமார் 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்."

அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆண்டு விழா சிறப்பான முறையில் நடைபெற வேண்டும். மாணவர்களின் தனித்திறன்களை அவர் தம் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் சிறப்பாக வெளிப்படுத்த ஏதுவாக அரங்கம் அமைத்து, சிறந்த ஒளி, ஒலி அமைப்பினை ஏற்படுத்தி ஆண்டு விழாவினை கொண்டாடிட பள்ளித் தலைமை ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழுவுடன் இணைந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

| வ. எண் | மாணவர்களின் எண்ணிக்கை * | மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | உயர் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | நடு நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை | மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கை | ஒரு பள்ளிக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய தொகை | ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய ஒட்டுமொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2000க்கு மேல் | 50 | – | – | – | 50 | 50,000 | 25,00,000 |
| 2 | 1001 முதல் 2000 வரை | 339 | 5 | 4 | 2 | 350 | 30,000 | 1,05,00,000 |
| 3 | 501 முதல் 1000 வரை | 1251 | 79 | 64 | 44 | 1438 | 15,000 | 2,15,70,000 |
| 4 | 251 முதல் 500 வரை | 1112 | 564 | 493 | 288 | 2457 | 8,000 | 1,96,56,000 |
| 5 | 101 முதல் 250 வரை | 372 | 1859 | 3512 | 2236 | 7979 | 4,000 | 3,19,16,000 |
| 6 | 100க்கு கீழ் | 32 | 587 | 2903 | 21780 | 25302 | 2,500 | 63,25,500 |
| மொத்தம் | | 3156 | 3094 | 6976 | 24350 | 37576 | | 14,93,97,000 |

(ரூபாய் பதினான்கு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரம் மட்டும்)

எனவே, மேற்குறிப்பிட்டுள்ளவாறு உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் 10.02.2024–க்குள் ஆண்டு விழாவினை நடத்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) – ஆகியோருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு :

பள்ளிகளின் எண்ணிக்கை விவரம் மற்றும்

செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டிய விவரம்

தொடக்கக் கல்வி இயக்குநர்

பள்ளிக் கல்வி இயக்குநர்

(ஆணைப்படி)

இணை இயக்குநர்

பெறுநர்:

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)

21.01.24